

கோயம்புத்தூர் உக்கடம் ஆத்துப்பாலம் இடையேயான மேம்பாலத்தில் இறுதி கட்ட பணிகள் நடைபெற்று வருவதை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கழக துணைப் பொதுச்செயலாளரும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, நெடுஞ்சாலைத்துறை தலைமை பொறியாளர் சந்திரசேகரன் ஆகியோர் உள்ளனர்.



சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் நேற்று முன்தினம் (14.06.2024) வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் 2024 – மே மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் (ம) தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்/தனித்துணை ஆட்சியர் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி.ஜகந்நாதன், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், அனைத்து கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!



மதசார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**17.6.2024 - வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம்**

| நேரம் | இடம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| காலை 8.30 மணி | சத்திரம் | நாயக்கனூர், பீமகுளம் |
| காலை 9.00 மணி | கல்லரபட்டி | நரசிங்கபுரம் |
| காலை 9.30 மணி | பூங்குளம் | பஸ்நிலையம் |
| காலை 10.00 மணி | மரிமானி குப்பம் | புதூர் பஸ் நிலையம் |
| காலை 10.30 மணி | மீட்டூர் | பஸ் நிலையம் |
| காலை 11.00 மணி | 102 ரெட்டியூர் | பஸ் நிலையம் |
| காலை 11.30 மணி | நிம்மியம்பட்டு | பஸ் நிலையம் |
| காலை 12.00 மணி | வெள்ளகுட்டை | பஸ் நிலையம் |
| காலை 12.30 மணி | கொத்தகோட்டை | கூட்டுரோடு |
| காலை 1.00 மணி | பெரியகுரும தெரு | பஸ் நிலையம் |
| காலை 1.30 மணி | விஜிலபுரம் | பஸ் நிலையம் |
| மாலை 4.00 மணி | பெத்தவேப்பம்பட்டு | பஸ் நிலையம் |
| மாலை 4.30 மணி | வள்ளிபட்டு | பஸ் நிலையம் |
| மாலை 5.00 மணி | கோவிந்தபுரம் | கோயில் எதிரில் |
| மாலை 5.30 மணி | வளையர்பட்டு நெக்கான மலை | அம்பேத்கார் சிலை |

**18.6.2024 - நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி**

| நேரம் | இடம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| காலை 8.30 மணி | நாராயணபுரம் | பஸ் நிலையம் |
| காலை 9.00 மணி | அலசந்தாபுரம் | ஊர் மத்தியில் |
| காலை 9.30 மணி | திம்மாம்பேட்டை | பஸ் நிலையம் |
| காலை 10.00 மணி | புல்லூர் | மோட்டூர் |
| காலை 10.30 மணி | சிக்கனாங்குப்பம் திகுவாப்பாளையம் | பஸ் நிலையம் |
| காலை 11.00 மணி | அழிஞ்சிகுளம் | ஊர் மத்தியில் |
| காலை 11.30 மணி | தும்பேரி | பஸ் நிலையம் |
| காலை 11.45 மணி | சங்கராபுரம் | ஊர் மத்தியில் |
| பகல் 12.00 மணி | எக்லாஸ்புரம் | ஊர் மத்தியில் |
| பகல் 12.30 மணி | வடக்குபட்டு | ஊர் மத்தியில் |
| பகல் 12.45 மணி | அம்பலூர் | பஸ் நிலையம் |
| பகல் 1.00 மணி | கொடையாஞ்சி | ஊர் மத்தியில் |
| பகல் 1.15 மணி | தெக்குப்பட்டு | ஊர் மத்தியில் |
| மாலை 3.30 மணி | மல்லாங்குப்பம் | ஊர் மத்தியில் |
| மாலை 3.45 மணி | ராமநாயக்கன்பேட்டை | பஸ் நிலையம் |
| மாலை 4.00 மணி | ஆவரங்குப்பம் | ஊர் மத்தியில் |
| மாலை 4.30 மணி | மல்லகுண்டா | பஸ் நிலையம் |

**18.6.2024 - உதயேந்திரம் பேரூர் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி**

| நேரம் | இடம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| மாலை 5.00 மணி | மேட்டுப்பாளையம் | பஸ் நிலையம் |
| மாலை 5.30 மணி | உதயேந்திரம் | பேரூராட்சி அலுவலகம் எதிரில் |
| மாலை 6.00 மணி | மேட்டுத் தெரு | பஸ் நிலையம் |
| மாலை 6.30 மணி | குந்தாணி மேடு | கோயில் எதிரில் |
| மாலை 7.00 மணி | C.V.பட்டரை | பஸ் நிலையம் எதிரில் |
| மாலை 7.30 மணி | வெங்கடாபுரம் | கோயில் எதிரில் |

**19.6.2024 - ஆலங்காயம் பேரூர் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி**

| நேரம் | இடம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| காலை 8.30 மணி | புலவர் பள்ளி | பஸ் நிலையம் |
| காலை 8.15 மணி | தர்மராஜபுரம் | பஸ் நிலையம் |
| காலை 8.30 மணி | ஆலங்காயம் | பஸ் நிலையம் அம்பேத்கர் சிலை அருகில் |
| காலை 9.00 மணி | பெத்தூர் மாரியம்மன் கோயில் அருகில் | மாரியம்மன் கோயில் அருகில் |
| காலை 9.30 மணி | மார்க்கெட் மூலை | மார்க்கெட் மூலை |
| காலை 10.00 மணி | ஆலங்காயம் ஆதி காலனி | ஆலங்காயம் ஆதி காலனி |
| காலை 10.30 மணி | பங்கூர் | பர்கூர் |

**19.6.2024 - திருப்பத்தூர் கிழக்கு வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி**

| நேரம் | இடம் | கலந்துகொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| காலை 11,30 மணி | ஆண்டியப்பனூர் | பஸ் நிலையம் |
| காலை 12.00 மணி | இருனாப்பட்டு | பஸ் நிலையம் |
| காலை 12.30 மணி | பெருமாப்பட்டு | பெருமாப்பட்டு பஸ் நிலையம் ஜடையனூர் பஸ் நிலையம் |
| மதியம் 1.00 மணி | பள்ளவள்ளி | ஊர் மத்தியில் |
| மதியம் 1.30 மணி | குரிசிலாப்பட்டி | பஸ் நிலையம் |

**19.6.2024 - வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி வாணியம்பாடி நகரம்**

| நேரம் | இடம் |
|---|---|
| மாலை 4.00 மணி | பெரியகோட்டை பெருமாள் கோயில் |
| மாலை 4.30 மணி | கடைக்காரர் தெரு இக்பால் சாலை |
| மாலை 5.00 மணி | ஜின்னா மேம்பாலம் பார சந்தி அருகில் |
| மாலை 5.30 மணி | கோணமேடு Dr. B.R.அம்பேத்கர் சிலை |
| மாலை 6.00 மணி | புதூர் மகாத்மா காந்தி சிலை அருகில் |
| மாலை 6.30 மணி | பைபாஸ் நியூ டவுன் பேருந்து நிலையம் |
| இரவு 7.00 மணி | பெருமாற் பேட்டை கூட்டு ரோடு |

## அரசியல் களம் - ஆட்சி நிர்வாகம்; இரண்டிலும் அடுத்தடுத்து 'சிக்ஸர்'

# தொடர் நாயகனாக மிளிர்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜுன் 16 -

அரசியல் களம், ஆட்சி நிர்வாகம் இரண்டிலும் அடுத்தடுத்து சிக்ஸர் அடித்து தொடர் நாயகனாக மிளிர்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் என "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:

தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை சார்பில் சென்னை. நேரு விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சிகரமான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். 'புதுமைப் பெண்' திட்டம் போல், மாணவர்களுக்கு 1000 ரூபாய் வழங்கும் 'தமிழ்ப் புதல்வன்' திட்டம் தொடங்கப்படும் என்பதே அந்த செய்தி.

திமுக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்வி கற்க செல்லும் மாணவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது. அதாவது இளங்கலைபடித்து முடிக்கும் வரை இந்த தொகை வழங்கப்படுகிறது. மாணவிகள் இதை பெற வேறு எங்கும் செல்ல வேண்டியதில்லை. நேரடியாக அவர்களது வங்கிக்கணக்குகளில் இந்த தொகை செலுத்தப்படுகிறது. இந்த திட்டத்துக்கு 'புதுமைப்பெண் திட்டம்' என பெயர் வைக்கப்பட்டது. இந்த திட்டம், கடந்த ஆண்டு துவக்கப்பட்டு, ஒரு வருடமாக மாணவிகளுக்கு பணம் வழங்கப்படுகிறது.

'புதுமைப்பெண் திட்டம்' போல், மாணவர்களுக்கு 1000 ரூபாய் வழங்கும் வகையில் தான் தற்போது 'தமிழ் புதல்வன்



தினகரன்

ஜுன் 15, 2024 சனிக்கிழமை

அடுத்தடுத்து 'சிக்ஸர்'

தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை சார்பில் சென்னை. நேரு விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சிகரமான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். 'புதுமைப்பெண்' திட்டம் போல், மாணவர்களுக்கு 1000 ரூபாய் வழங்கும் 'தமிழ் புதல்வன்' திட்டம் தொடங்கப்படும் என்பதே அந்த செய்தி.

திமுக அரசு ஆட்சிப்பொறுப்பேற்ற பின்னர் தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் 6 முதல் 12-ம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்வி கற்க செல்லும் மாணவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதாவது இளங்கலை படித்து முடிக்கும் வரை இந்த தொகை வழங்கப்படுகிறது. மாணவிகள் இதை பெற வேறு எங்கும் செல்ல வேண்டியதில்லை. நேரடியாக அவர்களது வங்கிக்கணக்குகளில் இந்த தொகை செலுத்தப்படுகிறது. இந்த திட்டத்துக்கு 'புதுமைப்பெண் திட்டம்'

திட்டம்' அறிவிக்கப்பட்டு, வரும் ஆகஸ்ட் மாதம் தொடங்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் அறிவித்துள்ளார். அரசு பள்ளியில் படித்து, கல்லூரி சேரும் மாணவர்களுக்கு இந்த தொகை வழங்கப்படும். இளங்கலை படித்து முடிக்கும் வரை மாணவர்களுக்கு இந்த தொகை வழங்கப்படும். மாணவர்கள் இதை பெற வேறு எங்கும் செல்ல வேண்டியதில்லை. நேரடியாக அவர்களது வங்கிக்கணக்குகளில் இந்த தொகை செலுத்தப்படும். இது உயர்கல்வி செல்லும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

ஒன்றியத்தில் ஆளும் பிரதமர் மோடி தமிழ்நாட்டை வஞ்சிக்கும் வகையில் ஆட்சி செய்து வருகிறார். தமிழ்நாட்டு மாணவர்களின் நலனில் எந்த அக்கறையும் செலுத்தாமல் செயல்பட்டு வருகிறார். முறைகேடுகள் நிறைந்த நீட் தேர்வு மூலம் தமிழ்நாட்டு ஏழை மாணவர்களின் மருத்துவ கனவைசிதைத்து வருகிறார். ஆனால் கடந்த 7.5.2021 அன்று முதல்வராக பதவி ஏற்றது முதல் எல்லா தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் அதிரடி திட்டங்களை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து, அவற்றை செயல்படுத்தி, மக்களை மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தி வருகிறார். அவர் மாணவ, மாணவிகளின் நலனிலும் அதிக அக்கறை செலுத்தி, அவர்கள் கல்வியில் வளர்ச்சியடைய திட்டங்களை வகுத்து, செயல்படுத்திக்கொண்டே வருகிறார்.

பசியின்றி மாணவர்கள் கல்வி கற்க வசதியாக காலை உணவு திட்டத்தை கொண்டு வந்தார். புதுமைப்பெண் திட்டத்தை அடுத்து தற்போது 'தமிழ் புதல்வன் திட்டம்' அறிவித்திருக்கிறார். இப்படி அவர் அடுத்தடுத்து 'சிக்ஸர்' அடித்து, தமிழ்நாட்டை கல்வித்துறையில் வளர என்னென்ன திட்டங்களை வகுத்து செயல்படுத்த முடியுமோ அதனை செய்து மாணவ, மாணவிகளின் ஏகோபித்த ஆதரவை பெற்று வருகிறார். சமீபத்தில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ்நாடு, புதுவையில் 40க்கு 40 தொகுதிகளில் வெற்றியை பெற்றுக் கொடுத்துள்ளார். அரசியல் களமாக இருந்தாலும் சரி, ஆட்சி நிர்வாகமாக இருந்தாலும் சரி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அதில் வெற்றி பெற்று தொடர் நாயகனாக மின்னுவது ஒட்டுமொத்த இந்தியாவை, தமிழ்நாடு நோக்கி திரும்பி பார்க்க வைத்துள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம்-4**

ம.அ.4.ந.க.எண்.பி3 / 1316 / 2024

**E-ஒப்பந்தப்புள்ளிகள்**

மண்டலம் - 4ல் ஒரு பணிக்கு மண்டல அலுவலர் - 4 அவர்களால் ஒப்பந்தம் வரவேற்கப்படுகிறது.

மண்டலம் - 4, பகுதி - 10, வார்டு 43, சொக்கலிங்கம் காலனி மெயின் தெருவில்

**புதியதாக மீன் அங்காடி கட்டும் பணி**

**பணிக்கான மதிப்பு - ரூ.75.00 இலட்சம் மட்டும்.**

ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** என்ற இணைய தளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். ஒப்பம் பதிவேற்றம் செய்யும் **நாள் மற்றும் நேரம் - 04.07.2024 அன்று மாலை 3.00 மணி** வரை, ஒப்பம் திறக்கப்படும் **நாள் மற்றும் நேரம் 05.07.2024 அன்று மாலை 3.30மணிக்குள்** ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 1945 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **மண்டல அலுவலர்-4**





கோயம்பத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூரில் அமைந்துள்ள தி.மு.கழக அலுவலகத்தில், கோயம்பத்தூர் மண்டல, ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருகின்ற விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் பணி செவ்வனே மேற்கொள்ளுதல் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பாக நடத்துதல் குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதுசமயம் இக்கூட்டத்தில் இணைச் செயலாளர்கள் வி.பி.இராசன், திப்பம்பட்டி ஆறுசாமி, துணைச் செயலாளர்கள் மாரியப்பன் கென்னடி, மு.பொன்தோஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்ட ஏற்பாட்டை கோவை மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் தென்னை சிவா (வடக்கு), ஞானசேகரன் (தெற்கு), டெம்போ சிவா (மாநகரம்) ஆகியோர் செய்தனர்.

## ஜுலை 10-ம் தேதி

# விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல்!

## வேட்பு மனு தாக்கல் தொடங்கியது!

விழுப்புரம், ஜுன் 16–

விக்கிரவாண்டி இடைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் தொடங்கியது. வேட்பு மனு தாக்கல் செய்ய வரும் 21–ம் தேதி கடைசி நாளாகும். விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ., புகழேந்தி மறைவையடுத்து அங்கு வரும் ஜுலை 10–ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலுக் கான வேட்பு மனு தாக்கல் நேற்று முன்தினம் தொடங்கியது. வேட்பு மனு தாக்கல் செய்ய 21–ம் தேதி கடைசி நாளாகும். 24ம் தேதி வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறுகிறது. வேட்பு மனுக்களை திரும்ப பெற 26ம் தேதி கடைசி நாளாகும்.

விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் அலுவலர் அமருவதற்கான இருக்கை கள் மற்றும் வேட்பு மனு தாக்கல் செய்ய வருபவர்கள் அமர்வதற்கான இருக்கைகள் என அனைத்து ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன.

## துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி.யின் நேர்முக உதவியாளர்

# ராஜா சிதம்பரம் மனைவி சௌந்திரம் மறைவு!

## வி.ஜெகதீசன் – கே.என்.அருண் நேரு எம்.பி. – எம்.பிரபாகர் எம்.எல்.ஏ. அஞ்சலி!



பெரம்பலூர், ஜுன் 16 -

கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., நேர்முக உதவியாளர், ராஜாசிதம்பரம் மனைவி திருமதி ரா.சௌந்திரம் உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார்.

சொக்கநாதபுரம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த சௌந்திரம் உடலுக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், கே.என்.அருண்நேரு.எம்.பி., மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சொக்கநாதபுரம் கிரா மத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ் குமார், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் வி.எஸ்.பெரியசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,பொதுக்க்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், ந.ஜெகதீஷ்வரன், எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ப.செந்தில்நாதன், பெரம்பலூர் ஒன்றிய பெருந்தலைவர் மீனா அண்ணாதுரை, வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணை தலைவர் எம்.ரெங்கராஜ், வேப்பூர் ஒன்றிய பெருந்தலைவர் பிரபா செல்லப்பிள்ளை மற்றும் பலர் அஞ்சலி செலுத்தினர்.



துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. நேர்முக உதவியாளர் முரசொலி முகவர் ராஜா சிதம்பரம் மனைவி சௌந்திரம் உடல்நலக்குறைவால் காலமானார். அன்னாரது உடலுக்கு கே.என். அருண்நேரு. எம்.பி., மலரஞ்சலி செலுத்தினார். மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.